The Great Master Our Lord Jesus Christ Himself said "I came not to be ministered unto but to minister" (Math 20 : 28) If we will truly love we will serve, for 'Love without action is dead' — — When that is our motto where is the room for anything but happiness in us?

* * *

Camera club notes,

By:

C. Ambrose, Secretory.

I have very great pleasure in presenting the annual report of the School camera club. The year under review has been one of varied activities. The members met every Saturday, and they had lectures and demonstrations. The dark room was available on all holidays for members to work.

We are grateful to the Principal for presenting us an enlarger worth rupees four hundred. Now we are able to make our own enlargements. In order to work comfortably in the dark room, we have been provided with an eletric fan. We are thankful to the Principal for this kind help and encouragement. Now it is a pleasure to work in the dark room.

During the school exhibition we had a photographic section. We displayed more than hundred pictures. We also ran a photographic studio. as a project with screen, flood lamps and all We took poses at the rate of eight annas a post card. We ended up with a small loss.

The annual Photographic competition came off in January. Silver medals were awarded by Dr. V. K. Pandian to prize winners. The following are the results of the competition.

First	——	C. Ambrose	Form VI-A
Second	——	Ramaswamy	Form VI-A
Third	——	Md. Salia	Form V-B

I take this opportunity to thank Mr. S. R. Pandyan. the President, and the other teacher members of the club like Messrs. V. Banal Rajaram and S. Chidambaram for all their help and guidance. May this clnb grow from strength to strength in the coming years!

THE BIBLE

S. GEORGE BALA,
Form VI-B.

The Bible, the Book of all books which contains sixty six books, was written by about forty authors. They lived in different countries. It was written during a long period. Kings like David and Solomon, statesmen like Daniel and Nehemiah, prophets like Isaiah and Ezekiel, unlearned and ignorant fishermen like Peter and John, learned men like Moses and Paul were some of the writers of this miraculous Book. Many of the writers never saw each other and they did not know what the others had written. The central idea of all their writings is the same. This proves that it is really not these writers who wrote the Books of the Bible at their own accord but by the inspiration of God. Every letter, dot and title of the Bible are inspired by God. One of the writers by name Paul says "All scripture is given by the inspiration of God."

The Bible is not just the religious book of the Christians but it is a Universal Book. It is acceptable by all because it is the word of God. It contains doctrines, history, geography, poetry, lyrics, science and all other forms of literature. But none of these are against one another or against modern science, inventions or discoveries. In this small article I would like to take some examples from the Bible, to show that these facts are not mere thoughts of men, but inspiration of God. Men with their own minds cannot realise such great truths.

For example, until modern times it was a firm belief of the people that the earth was flat. They even mocked at Gallileo when he said that the earth was round. But Isaiah who lived about 700 B. C. wrote "It is he that sitteth upon the circle of the earth" [Isaiah 40 : 22] Did Isaiah know that the world is a circle? No. But God who created the earth inspired Isaiah to write this fact centuries before the discoveries of man.

Isaac Newton found the law of gravitation. Till then the people believed that the earth was sustained by some support. Let us see what the Bible says about it. "He stretched out the north over the empty place, and hangeth the earth upon nothing" [Job 26 : 7] How could Job who lived 3200 years before Newton know this secret? He was not a scientist to have known this fact.

Now let us come to New Testament. Paul writes in I Corinthians 15 : 41 "There is one glory of the sun, and another glory of the moon, and another glory of the stars: for one star differeth from another star in glory" Was Paul an astronomer? Still Paul said that "one star differeth from another star in glory." Millions of stars which are in the blue sky have been photographed, and the officer of one of the famous observatories said that "not two of them are alike.

Several more examples may be given to show that inspired writers wrote the Bible. The more we study this wonderful book, the more we will be moved to believe that it is God that inspired the writers who wrote it. Dear reader, do you believe in the inspiration of the Bible? If not study the Bible more and know that it is the inspired word of God.

DO YOU BELIEVE IN GHOSTS?

T. KANNAIYAN
Form VI B.

ONE night I lay outside our house and relaxed myself to sleep; but sleep would not come. The thought of ghosts came to my mind. Personally I do not believe in ghosts, but I fear them. The reason is that I have been told ghost stories from child - hood.

I said to my uncle who was lying by my side. "uncle, do you think that there exist ghosts? "Yes" he replied and sat up to tell a story. "I was staying in a big bungalow surrounded by bushes and trees. I was in bed but awake when the clock struck twelve. After a while I heard footsteps coming closer and closer to my room. I remembered that I had closed all the doors. And the doors were so strong that no one could break in. But, what could that noise be? Immediately I took my torch and went-out of my room and searched. I found nothing. I came back to bed. Some minutes passed. I heard the noise again. I waited to see what it was. I sensed something in my room, but before I could use my torch I felt a pressure on me. I could not move and I could not shout or scream. After sometime I was relieved from the strange weight upon my body. I was horror struck. I was restless and I could not sleep that night at all. In the morning I left the bungalow never to return"

Hearing this story, another uncle began to tell his story. "It is a story about the ghost, a ghost that exists. I came home late one night from office. I was staying alone then. When I unlocked the door I saw a fearful – looking woman with very long hair touching the floor. She smiled unpleasantly, turned round and went away in the direction of the kitchen. what did I do, you know? I locked the door again and went back my way and stayed in a lodge."

I was very much afraid when I heard these two stories. I jumped down from my cot and ran into my house and lay by the side of my mother

Addison, the great English writer has an experience to tell us. He heard about a haunted place where a ghost would come in the middle of the night in the form of a horse to graze. Addison did not believe in ghosts and so he wanted to know the truth. He went to that place alone. He took a staff in his hand. To his horror he saw at a distance a horse-like thing. It was slowly moving, too. Boldly he went nearer and nearer the object. At last he saw a real horse grazing on the green.

Addison says that ghosts are apparitions that exist in the mind only. So boys, donot believe in ghosts because the more you believe in them the more you well fear them.

Some Intelligent Questions:

S. GEORGE DEVADAS,
VI Form 'D' Section

Questions :-

1. What is that which is heavier than the world?
2. What flies quicker than the winds ?
3. What sleeps with open eyes ?
4. What is born alive and does not move ?
5. What is the best path to Heaven ?
6. What is the greatest of all joys ?
7. What enemy is hardest to conquer ?
8. What is the chief of virtues ?

(See Answers in page 40)

WHAT YOUNG INDIA NEEDS TO REMEMBER TO-DAY

D. KRISHNAMURTHY

V-Form 'B'

Now that India has got freedom it is quite proper that we examine our defects, adopt good ideals and act in the present time. We should try to stand on our legs. We must be fair and just to all. We should be patriotic without blindly admiring anything and overlooking the faults of the Nation. Let our ideals be "*Liberty*, *Equality* and *Fraternity*" as the American settlers adopted for winning freedom to themselves and thence ever after.

Let us first remember the *dignity of labour*. No one should think of being lazy or allow himself to grow fat at other's expense. This has been our national weakness for centuries. For example if a member of the family earns a fair income round him gather cousins, brothers-in-law, sons-in-law etc. to exploit him. Surely this is not the way of progress either to the host or to the hangers - on.

Secondly we should know the *value of time*. Time and tide waits for no man. So let us "take time by the fore-lock". And we should never delay or dilly-dally what we have got to do now, dreaming all day long, for day-dreaming is a hobby with most of us in this land.

Thirdly we should know what is *our duty* to ourselves and to others. What ever duty we are required to do should be done perfectly, wisely and whole-heartedly. Any personal motive should not stand in the way of our duty. Doing duty in right earnest not only earns the gratitude of our people but also is the

cause of our own happiness. For example if an officer should do what is just and useful to the people at large, that is his merit. No fear or favour should enter his head. So also a minister of the state or a leader of men should always think he is the custodian of people's rights and not. consider his position a stepping stone to further his end or that of his own kith and kin. If perhaps we shall one-day come to a responsible post we should remember our duties and think well before committing an act.

Lastly we should know that *self-help* is the best help. One should not count upon the help of friends and relations. They may have their own difficult days not to part with their little money. So one should adjust his own in-come without depending on out-side help. As the proverb tells us "God helps those that help themselves". Hence self-confidence and self reliance are very important virtues to cultivate in our lives — beginning even while we are at school.

Answers :-

1. The love of a mother
2. Thought flies quicker than the winds.
3. A fish sleeps with open eyes.
4. An egg is born alive and does not move.
5. Truth is the best path to Heaven.
6. Health is the greatest of all joys.
7. Anger is man's worst enemy.
8. Charity is the best virtue.

***** SMILE A WHILE *****

Selected by
S. GEORGE DEVADAS
VI Form 'D' Section.

Manager: "I cannot see you to-day."
Salesman: "That is why I have brought your spectacles, Sir."

* * * * * *

Teacher: "Where was the treaty of the 3rd Mysore war signed"
Student: "On a paper, Sir"

* * * * * *

Teacher: "Ramu, you are becoming very bad day by day. Tell your father to see me."
Student: (Doctor's son) "My father will charge you 4 rupees per visit, Sir."

* * * * * *

First-aid Lecturer: What will you give to a man who has drunk ink?
A Student: I will make him eat a sheet of blotting paper, Sir.

* * * * * *

Science Teacher: What is the greatest change which occurs when water becomes ice.
A Sharp Student: An increase in price, Sir.

* * * * * *

Raman: Krishna, I see a fool in you.
Krishna: Because I am your mirror.





NALINI

By
S. SPURGEON IMMANUEL
Form V B Section

THE sun cast its golden rays on the dewy ground The farmers of the villages were hurrying to their fields and the cattle wended their way to their pasture before their master. Some of the village children gathered in Nalini's home to take her to school. May I go to school father? I am not going to the fields to-day. I am going away from you and when I come back. I will get you some beautiful silk skirts and jackets like Malathy's. So you should stay at home with me to-day. Nalini's eyes sparkled with joy.

She did not know that her father would be absent from her for a long time and the thought of the beautiful skirts that he would bring filled her with joy. She ran to her grand-mother and told her the joyous news. That old grand-mother was like on angel to that motherless child.

Nalini's mother died when Nalini was two years old. Since then her grand-mother had been a source of comfort and strength to her. Nalini's father managed to run the home by his hard toil in the fields The poor wages for which he laboured come to an end, as the failure of the rains deprived him of work in the empty fields. They had nothing save their poor cottage. So he had to sacrifice the happiness he had with his daughter and go abroad to earn his living. As fate would have it he found an employment in the regiment and was forced to leave his daughter.

Months rolled on and years passed by and Nalini had finished her education in the village school. She had grown to be a beautiful girl and her dark curly hair and well built body added to her beauty.

Day in and day out Nalini dreamed of her father. She prayed daily for her father's return. But they received no news from him. Still Nalini had great hopes of seeing her father. Every evening when the old postman passed by she would eagerly enqire. Is there any letter for me?

"You will get one to-morrow" he would reply. Thus everyday become the dupe of to-morrow.

It was a great festival-day in that village. Early in the morning Nalini went with her friends to the near-by pool to take her bath and had a gay time there. Her gaiety was indeed hampered by her great desires, the craving for beautiful ornaments. But how can she a poor fatherless girl ever possess them? She had none but her Heavenly-father to whom she prayed every day.

Thus depressed Nalini returned to her house along the meadows "Ah!" She cried suddenly, and the pot slipped from her head to the ground and she feel down in a faint. Her friends were not slow to find the reason of her fall. Blood rushed from her foot and her companions after a while saw a spotted snake crawling before them. The poor village girls stood amazed not knowing what to do to save her life. They realised that it was not the stone that hurt her but the bite of the venomous creature.

Nalini was brought home and she regained her consciousness after a long while, but was given no first aid. Her grand-mother burst into tears and the news spread like wild fire. The whole village assembled in front of her little thatched house. Some one brought

some medicinal leaves and plastered them on the spot where the cruel serpent had bitten her, and sent for the magician of that village. He muttered some "mantras" into her ears and did everything that was in his power but it was of no avail.

Night was approaching. The oil-lamp in the corner of the room was burning dimly. Nalini was better. She was in a delirium. Her breath was short and rapid and she groaned with pain. She saw a person like her father calling out, "Where is my daughter". Doubt assailed her - was it true or was it only a fond dream? But it was really her father.

The cry, "Nalini, my prize, my wealth, my all! Where have you gone?" was feebly audible in her ears. To that old grand-mother, the joy of meeting her son brought only immeasurable grief. The last breath of life escaped from Nalini's mortal body.

கலையழகி மல்லிகாதேவி

தீட்டியவர் :

இரா. செகதீசன்,

ரு-ஆம் படிவம் 'அ' பிரிவு

தூயபேதுரு உயர்நிலைப்பள்ளி, தஞ்சை.

அலங்காரபுரம் என்னும் பட்டினத்தை ஆதித்தன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். ஆதித்தன் என்றால் சூரியன் என்று பொருள். அவ்வரசன் சூரியனைப்போன்று பிரகாசமான அழகு உடையவனாக இருந்ததால் அப்பெயர் அவனுக்கு இடப்பெற்றது போலும்.

ஆதித்தன் உருவத்தில் அழகன்தான். ஆனால் கல்வி, கேள்விகளிலோ அமாவாசை இருளையே ஒத்திருந்தான். யார் எதைச் சொன்னாலும் "ஆமாம் சாமி" போடும் ஆற்றலைப் பெற்றிருந்தானே தவிர சுவாதீன புத்தியோ, சாதுரியமோ அன்றி அரசனுக்கு வேண்டிய வீரமோ அவனிடம் இல்லை அலங்காரபுரத்திலே நடந்த ஆட்சி அரசனது திறமையினாலே இல்லை. மதியுள்ள மந்திரிகளின் சாமர்த்தியத்தினால்தான் என்று கூறினால் மிகப்பொருந்தும்

ஆனால் ஒன்று—ஆதித்தனின் தவப்பயனோ என்னவோ மல்லிகா என்னும் அவனுடைய அரசிளங்குமாரி மிகுந்த புத்தி சாலியாக விளங்கினாள்.

மல்லிகா அழகின் அவதாரம். பௌர்ணமியில்காணும் சந்திரனைப் போன்ற சுந்தரபிம்பம். இசை பாடுவதிலே குயிலை நிகர்த்தவள். சித்திரம் வரைவதிலே ஓவியக்கலைஞர் இரவிவர்மாவைத் தோற்கடிப்பவள். பேச்சுத் திறமையிலோ சொல்ல வேண்டியதில்லை. ஆதித்தன் சபைக்குவரும் எந்தக் கலைஞரும் சற்று அச்சத்துடனேயே வந்துசெல்லுவர்.

இளவரசி மல்லிகாவின் எழிலையும், ஆற்றலையும், கலை வல்லமையையும் கேள்விப்பட்டிருந்தான் ஆரியநாட்டு வேந்தன்

உக்கிரமன் இளவரசி மல்லிகாவை மணமுடிப்பதென்று அலங்காரபுரத்திற்கு வந்தான். ஆதித்தன் அவனை ஆடம்பரங்களுடன் வரவேற்றான். அரண்மனையிலே பெரும் விருந்தளித்தான்.

ஆதித்தன் தன் குமாரி மல்லிகாவின் விருப்பப்படி, தன் அரசாங்கத்தில் இருகட்டளைகளை ஏற்படுத்தியிருந்தான். அதன் ஷரத்து—மதியூக மல்லிகா தான் கேட்கும் இருகேள்விகட்கும் சரியான விடை யார் அளிக்கிறாரோ அவரையேதான் மணக்கப் போவதாக பறை அறிவிக்கப்பட்டிருந்தது.

விருந்து முடிந்ததும் உக்கிரமன் ஆதித்தனிடம் "தங்கள் இளவரசி மல்லிகாவின் அழகையும், கலைத்திறனையும் பற்றி எல்லா நாட்டு மக்களும் புகழ்ந்து பேசக்கேட்டேன். அவளை நான் மணந்து கொள்ள விரும்புகிறேன். இதற்கு இளவரசியின் சம்மதத்தைப் பெற்றுப்போகவே இங்கு வந்தேன். தாங்கள், மல்லிகாவை, நான் மணமுடிக்க மனமொப்ப வேண்டும்" என்று கேட்டான்.

ஆரியநாட்டு மன்னன் உக்கிரமன் ஆதித்தனைவிட படைபலமும், பராக்கிரமும் அதிகம் படைத்தவன் அத்துடன் அலங்காரபுரத்தைவிட ஆரியதேசம் மிகப் பெரியது. எத்தனை இருந்தாலும் இளவரசி மல்லிகா உக்கிரமனை மணக்க விரும்பினால் தானே ஆதித்தன் 'சரி' என்று சொல்லமுடியும்! எதற்கும் "ஆமாம் சாமி" போடும் ஆதித்தன் இது விஷயத்தில் மட்டும் "மல்லிகா மனம் எப்படியோ அதன்படி கேட்டுச் சொல்கிறேன்" என்று கூறிவிட்டான்.

உக்கிரமனின் ஆசையைக் கேள்விப்பட்ட மல்லிகா 'அப்படியே அந்த உக்கிரமனை மணந்து கொள்ளுகிறேன். ஆனால், என் கட்டளைக்கு இசைந்து நடக்க வேண்டும். கலையும், அறிவும், பொறுமையும் நிறைந்த ஒருவரையே நான் மணவாளனாக்கிக் கொள்ள சபதம் செய்துள்ளேன்—இது யாவரும் அறிந்ததே நாளை நமது கொலு மண்டபத்தில், அறிஞர், கலைஞர் மற்றும் பெரியோர்கள் முன்னிலையில் நான் இருகேள்விகள் கேட்பேன் கோபமென்பதே இல்லாமல் பொறுமையுடன் சரியான விடையை உக்கிரமன் தருவாரானால் அவரை மணக்கத் தடையேதுமில்லை. அதற்குச் சம்மதமானால் என் திருமணத்தைப்பற்றிப் பேசலாம்" என்று கூறிவிட்டாள்

இளவரசி மல்லிகாவின் அழகில் மோகங்கொண்ட உக்கிரமன் "ஆஹா! அதற்கென்ன தடை! மல்லிகா கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்கத் தயார்!" என்று இறுமாப்புடன் கூறி

"கேவலம் ஒரு பெண்ணுகப் பிறந்தவள் நம்மை கேள்வி கேட்கப் போகிருளாம்—சரி கேட்டுத்தான் பார்க்கட்டுமே இவளைத் திருமணம் என்னும விலங்கிட்ட பிறகு துன்பம் என்னும் சவுக்கைக் கொண்டு அகங்காரத்தை அடக்குகிறேன்" என்று தன் மனதிற்குள் சொல்லிக்கொண்டான்.

சகலகலாவல்லியான இளவரசி மல்லிகாவோ அந்த ஆரிய நாட்டு மன்னனின் திமிரான நடத்தையை விபரமாக அறிந்திருந்தாள். கலைஞர்களை மதியாக் கயவன்—மக்கள் இச்சைக்குமாருக ஆட்சிபீடத்தை ஆட்டிவைக்கும் அகங்கார சொரூபன்—இப்படி உக்கிரமான (நெருப்பைப்போல) குணம் அவனுக்கு இருந்தமை யால்தான் உக்கிரமன் என்ற பெயர் அவனுக்கு அமைந்தது போலும். ஆதலால் நாளை நமது அரச சபையில், அறிஞர் முன்னிலையில் இவனைத் தலைகுனிய வைக்கவேண்டும் எனத் திட்டமிட்டாள்.

மறுநாள் அலங்காரபுர அரண்மனை அல்லோல கல்லோலப் பட்டது. ஆதித்தன் சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். அவனுக்கு அடுத்து வலதுபுறத்தில் உக்கிரமன் அமர்ந்திருந்தான். இடதுபுறத்திலேயுள்ள ஆசனத்தில் இளவரசி மல்லிகா எழிலுடன் உல்லாசமாக வீற்றிருநதாள். எதிர்ப்புறத்திலே அரசாங்கக் கவிஞர்கள், புலவர் பெருமக்கள், பிரபுக்கள் ஆகியோர் அமர்ந் திருநதனா. தங்கள் நாட்டுக் கலைமணி இளவரசி மல்லிகா ஆரிய நாட்டு மன்னனைக் கேட்கப்போகும் அற்புதக் கேள்வி யாதாயிருக்கக் கூடுமோ? என்னும் ஆசைத் துடிப்பால் அரசசபை என்றுமில்லாத பரபரப்புடனிருநதது. இவைகளுக்கெல்லாம மாருக ஆரியநாட்டு மன்னன் உக்கிரமன் "இநதச் சிறுபெண நம்மைக் கேள்விகள் கேட்கப் போகிருளாம்! எனன வேடிக்கை ... ... வரட்டும் இவளைத் திருமணம் செய்துகொண்டு வாட்டி வதைக்கிறேன்" என்று திமிரும் அலட்சியமும் கொண்ட பார்வை யுடனிருந்தான்.

இளவரசி மல்லிகாதேவி எழுந்தாள். "அறிஞர்களே! பெரியோர்களே!! என் அருமைத் தந்தை அரசர் பெருமானே இன்று நமது சபையிலே வீற்றிருந்து — என் கேள்விகளுக்கு விடையளித்து என்னை மணந்துகொள்ள வந்திருக்கும் ஆரியநாட்டு மன்னர் உக்கிரமவேநதருக்கு என் வணக்கம்" என்று கூறினுள்.

இதைக்கேட்ட உக்கிரமனின் உள்ளம் கோபத்தால் வெகுண்டது! தன் ஆசனத்தை விட்டெழுந்தான். "இளவரசி! சபையிலே—அதுவும் அரச சபையிலே முதன் முதல் யாருக்கு வணக்

கம கூறுவது? அறிஞா, பெரியோா, உன் தநதை . ஆகக் கடைசியில ஆரியநாட்டு ஏக சககராதிபதியான உககிரமன னைககா வணககம்! உனனைக் கலைசசெலவி எனற அகஙகாரந தானே இபபடிப பேசவைத்தது" என்று படபடத்தான்.

இளவரசி மல்லிகா அவன் படபடபபைககணடு பயபபட வில்லை அரசர் பெருமானே எங்கள் நாட்டிலே முதல வணககம யாருககுச செலுத்துவதென்றால அறிஞா பெருமககளுககேதான் .. அபபுறமதான் அரசா முதலானோககு— இது இநநாட்டு பரமபரை அரசே! என் குறையில்லை. அதிகாரபீடத்திலிருக கிறாா என் தநதை என்பதறகாக அவருககு முதல் வணககம கிடையாது. அறிவுபபீடத்திலே இருபபவருககே தலை வணக் கம்—இதிலே குறையிருநதால தங்கள எணணக குறையே தவிர என தவறோ, கலைததிமிரோ எதுவும கிடையாது — என்று வீர முழககம புரிநதாள் இளவரசி மல்லிகாதேவி.

'எல்லாம சரி! நீ கேட்பதாகச சொனன கேள்வியை விரை வில் கேள்! அது எததகையதாயிருநதாலும என்னால விடைதர முடியும்! அதைவிட்டு அதிகபபிரசங்கம இங்கு செய்ய வேண டாம!' எனறு மிடுககாக உறுமினன உக்கிரமன

இளவரசி மலலிகா அவன் மிடுககிறகாக அஞ்சவிலலை "உககிரம மனனரே! எனன இருநதாலும நான் பெணதானே! தாஙகளோ ஆணமையும பலமும நிறைநத மனனா மனனன. நானோ ஒரு சிறுநாட்டு இளவரசி! ஆயினும சொலலடககம, கட்டுபபாடு இவைகளிலே நான ஒரு சக்கரவாததினியாவேன எனக்கிணை நானேதான. தஙகளால எனமுன நிறகச சகதி யிலலை" எனறு மொழிநதாள்.

கேவலம ஒரு பெண்ணனவள தனனைபபாாதது 'என்முன் நிறகச சகதியிலலை' என்று கூறிய வாாததைகள போர்ககளததில ஒரு எதிரி பலமான அமபுகளால தனனைத் தாககுவதைபபோல இருநதது உககிரமனுககு.

"இளவரசி! நீ ஒரு பெண எனபதறகாக மனனிககிறேன். வாாத்தையை அளவறியாது அளளி வீசுகிறாய படித்தவள என்ற அகஙகாரம உனனைப பிடிததாட்டுகிறது ... சரி. விரைவிலே உன கேளவிகளைச சொலலு! வீண காலதாமதம செயயாமல்" எனறு புலி போலச சீறினன.

உக்கிரமனின் அந்த சீற்றத்தைக்கண்டு மல்லிகா சிரித்தாள். அவள் அவனிடமிருந்து அதை எதிர்பார்த்துத்தானே பீடிகையை ஆரம்பித்தாள். பிறகு தான் மிகவும் பணிந்து பேசுவதுபோலப் பாவனை காட்டி 'ஆரிய வேந்தே! அறியாமல் பேசிய என் பிழையைப் பொறுக்க வேண்டும்! நேற்று நான் முதலாவதாகக் கேட்டுக்கொண்டபடி சரியான விடையைத் தருதல் வேண்டும். அப்படிச் சொல்லமுடியாவிட்டால் கோபமாவது கொள்ளாதிருத்தல் வேண்டும். நான் கேள்விகளை வெளியிடுவதற்கு முன்பே இத்தனை ஆத்திரம் காட்டுகிறீர்கள். கேள்விகளைக் கேட்டதும் மகாக்கோபம் கொண்டு விடுவீர்களோ என்று யோசிக்கிறேன். எப்படியிருந்தாலும் நான் சிறு பெண்தானே? இந்த நிபந்தனைகளுக்குத் தாங்கள் உட்படமறுத்தால் நான் அந்தக் கேள்விகளுக்கே வரவில்லை. என்னைத் திருமணம் செய்து கொள்ளும் விருப்பம் இருந்தால் பொறுமையுடன் எனக்கு விடையைத் தந்துதானாக வேண்டும்' என்று அவன் ஆத்திர புத்திக்கு சூடு கொடுத்தாள்.

இளவரசியின் இந்தப் புத்திமதி எரிகிறநெருப்பிலே நெய்யை ஊற்றினாற்போலாகிவிட்டது. ஆயினும் கோபத்தை வெளிக்காட்டினால் அவளை நிபந்தனைப்படி மணக்க முடியாதுபோய்விடும் என நினைத்து "இளவரசியே! பெண் என்றாலும் நீ பேச்சிலே உறுதி படைத்தவள் என்று தெரிந்து கொண்டேன். இனி உன் கேள்விகளைத் தயக்கமில்லாமல் வெளியிடலாம். நான் விடையளிக்கத் தயார். ஆத்திரங்காட்டமாட்டேன் ... ... ஆரம்பிக்கலாம்" என்று உறுதிகூறினான் உக்கிரமன்.

அவள் "அண்மையும் கண்ணியமும் மிகுந்த ஆரியவேந்தே! அந்தக் கட்டுத்திட்டங்களுக்குட்பட்ட தங்களிடம் இதோ கேள்விகளை ஆரம்பிக்கிறேன். முதலாவது கேள்வி ....

கேள்வி 1

கண்ணுக்குத் தெரியாது
கடமைதனை மறவாது
மன்னுயிரை மறவாது
மன்னவா என்ன அது?

இந்தக் கேள்விக்கு விடை தாருங்கள்" என்று உக்கிரமன் பதிலை எதிர்நோக்கினாள் ... .

உக்கிரமன் ... . என்னடா விசித்திரமாக இருக்கிறதே கேள்வி! விடையாதாயிருக்கலாம். நம்மூளைக்கு ஒன்றும் எட்டாத கேள்வியாக இருக்கிறதே! ஒரு பெண்ணின் கேள்விக்கு விடை தெரியவில்லை என்று சபையில் கூறுவதா? இவ்விதமாக அந்த ஒரு கேள்விக்கே பதில் தெரியாமல் விழித்தான், திகைத்தான், தலையைச் சொரிந்தான் உக்கிரமன்.

அவனது செய்கையைக்கண்ட இளவரசி மல்லிகாதேவி "ஆரிய மன்னவா! இந்தக் கேள்விக்கு விடையை ஜாடையாகக் காட்டுகிறேன் அப்பொழுதாவது சொல்லுங்கள்" என்று ஓர் கடிதச்சுருளை எடுத்து வாயினால் ஊதி அவன் பக்கமாகப்போய் விழும்படிச் செய்தாள். அது அவன் முகத்திற்கு நேராய் உராய்ந்துசென்று கீழே விழுந்தது. பார்த்தான் உக்கிரமன்— "ஒரு பெண்ணாய்ப் பிறந்த உனக்குத் தலைகர்வம் அதிகம் இருக்கிறது. காகிதச் சுருளை வாயினால் என்மேலே பறந்து விழச் செய்கிறாய்! அதிலிருந்து ஒன்றும் புரிந்துகொள்ள முடியாது. சரி, நிபந்தனைக்காக நான் பொறுத்திருக்கிறேன். நீ கேட்ட கேள்விக்கு விடையைச் சொல்லிவிடு!" என்று உறுமினான்.

"அரசே! நிபந்தனைக்குக் கட்டுப்பட்டு விட்டதாகத் தாங்கள் கூறின போதிலும் அதிகாரத்தைத்தானே காட்டுகிறீர்கள். உங்கள் கேள்விக்குச் சாதகமாக இருக்கும் பொருட்டுத்தான் அந்தக் காகிதச் சுருளை வாயினால் ஊதினேன். அதிருக்கட்டும்; அந்தக் கடிதச்சுருள் எதனுடைய உதவியால் தங்கள் மேலே வந்து வீழ்ந்தது? அதையாவது சொல்லமுடியுமா?" என்றாள் இளவரசி 'ஏன் முடியாது? நீ ஊதிய காற்றின் உதவியால் அக்கடிதச்சுருள் என் மேல் பாய்ந்தது" என்றான் உக்கிரமன்.

"அரசர் பெருமானே! இந்த விடையை முதலில் சொல்ல ஏன் மறந்து விட்டீர்கள்? தாங்கள் ஜாடையாகவாவது விடையை கூறட்டுமே என்ற நல்ல எண்ணத்தினாலேயே அப்படிக் கடிதச் சுருளை ஊதினேன். அதைத் தாங்கள் அறிந்து கொள்ளாமல் நான் தங்களை அவமதித்தேன் என்று தவறாக மதித்துவிட்டீர்கள். கண்ணுக்குக் காற்றின் உருவம் தென்படுமா? அந்தக் கண்ணுக்குத் தெரியாத காற்று என்றைக்காவது ஒரு வினாடி உலகத்தில் வீசாமல் கடமையை மறந்திருக்குமா? என் உடம்பின் உயிராகவும் உலகிலுள்ள யாவற்றிற்கும் உயிராகவும் .... ஏன் இங்கு வீற்றிருக்கும் மன்னர் பெருமானான தங்கள் உடலின் ஒப்பற்ற ஜீவனாகவும் இருப்பது நான் காகிதச்சுருளைப் பறக்கும்படிச்செய்த அந்த உருவமில்லாத காற்றுத்தானே மன்னவா?

இதை யாரும் ஏன்? தாங்களே இல்லை என்று மறுக்கமுடியுமா?" என்று இளவரசி கூறி முடிப்பதற்குள் "ஆம்; உண்மை; உண்மை இளவரசி!" என்று சபையோர் ஆரவாரம் செய்து இளவரசியாரின் சாதுரியமான கேள்வியைப் பாராட்டினார்கள். உண்மையை உணர்ந்த உக்கிரமன் தலைகுனிந்தான்.

இளவரசி மல்லிகாதேவி வெற்றியின் பிரதிபலிப்புடன் "ஆரியநாட்டு முடியரசே! இரண்டாவது கேள்வி ... ...

கேள்வி 2.

முடி திருத்தும் நாவிதரே!
முதலென்ன நீர்செய்வீர்? ... ..

இதற்கு விடைதருவீர்?" என்று இளவரசி கூறியதும், உக்கிரமன் முகத்திலே உண்மையாகவே நெருப்புப்பொறிகள் பறந்து வருகிறதோ என்று சொல்லும் வண்ணம் கோபத்தீ எழுந்தது.

"இளவரசி! ஒரு சுண்டைக்காய்போன்ற சிறுநாட்டு மன்னனின் மகளாய்ப் பிறந்த உனக்கு இத்தனை திமிர்! நிபந்தனை என்னும் திரையிட்டு ... ... கேள்வி என்பதைக் கேட்டு என்னை இவ்வளவு கேவலப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் செய்தது இந்நாட்டு மந்திரிகளின் சூழ்ச்சி என்றுதான் சொல்லுவேன் ... ... என்ன அக்கிரமம்! முடி திருத்தும் நாவிதரே! முதலென்ன நீர் செய்வீர் ஹஹ..... ஹஹ...... ஹஹஹா. நல்ல கேள்வியடா இது!" என்று காட்டு வேங்கையைப்போல சீறினன்.

அவனது கோபத்தைக்கண்ட அரசன் ஆதித்தன், மந்திரி பிரதானிகள், அறிஞர், புலவர் பெருமக்கள், பிரபுக்கள் ஆகிய அனைவரும் நடுநடுங்கினர். படைபல மிகுந்த ஆரியநாட்டு மன்னனின கோபம் மிகக்கொடுமை வாய்ந்தது என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். ஆதலால், இளவரசி மல்லிகாவின் இந்தக் கேள்வியால் என்ன விபரீதம் விளையுமோ என அஞ்சியவாறிருந்தனர்.

இளவரசி மல்லிகாவோ ஆரியவேந்தனின் சலசலப்புக்கு சிறிதும் அஞ்சவில்லை. முகத்திலே வீரம் தவழ்ந்து கொண்டிருந்தது. "ஆரியநாட்டு மன்னர் மன்ன! இக்கன்னியின் சொல்லிலே—கேள்வியிலே, கடுகளவும் தவறு உண்டா என்பதை முடிவுவரை பொறுத்துப் பாருங்கள்! அதற்காகத்தான் நிபந்தனையின் முதல்படியாகத் தாங்கள் கோபம் என்பதே இல்லாமல்

பொறுமையோடு இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டது. இதை அடிக்கடி எடுத்துக்காட்டியும், நிபந்தனையை மீறி கோபத்தை அள்ளிக் கொட்டிவிட்டீர்கள் மேலும் கேள்விக்கு விடை சொல்லத் தெரியாதிருந்தால் விடைதான் என்னவென்று கேளுங்களேன் ? என்று மொழிந்தாள்.

" சரி, சொல்லேன், கேட்கிறேன் !" என்று அலட்சியமாகக் கூறினன் உக்கிரமன்.

" அப்படிச் சொல்லாதீர்கள் மன்னர் பெருமானே ! தாங்கள் உலகத்தில் சர்வ சாதாரணமாக விளங்கும் தொழிலையோ, கலையையோ செய்து காட்டாவிடினும் அதைப்பற்றிய நுணுக்கத்தை யாவது அறிவீர்களல்லவா ?" என்றாள் இளவரசி மல்லிகா.

" ஆம். அறிவேன் நன்றாக ! அதற்கும் கேள்விக்கும் என்ன சம்பந்தம் ?" என்று படபடத்தான் ஆரியநாட்டு வேந்தன்.

" சம்பந்தம் இல்லாமலா சொல்லுவேன் அரசே !" என்று கூறிவிட்டு " முடிதிருத்தும் நாவிதனை முதலில் வரவழையுங்கள் " என்று அங்குள்ள சேவகர்களுக்கு இளவரசி கட்டளையிட்டாள். அவ்வாறே ஒரு முடிதிருத்தும் தொழிலாளரை அழைத்து வந் தனர் சேவகர்கள்

இப்பொழுது மீண்டும் இளவரசி மல்லிகா தன் கேள்வி பாணங்களைத்தொடுக்க ஆரம்பித்தாள். நாவிதரை விளித்து " நாவிதரே ! என் கேள்வியை நீயும் நன்றாகக் கேட்டுக்கொள் " என்று கூறிவிட்டு ... ...

" முடி திருத்தும் நாவிதரே !
முத லென்ன நீர் செய்வீர் ?" என்றாள்.

அவன் பதில்மொழி கூறமுடியாது விழித்தான். உக்கிரமன் கோபம் உதயமாகியது. " இளவரசி ! உன் கலைத்திமிருக்கு — புரியாத — அறிவற்ற கேள்விக்கு யார்தான் விடை தருவார். நீதான் அந்தக் கேள்வியின் புதிரை விளக்கவேண்டும் " என்று கூறினன்.

இளவரசி மல்லிகா " மன்னவா ! நான் நீங்கள் மொழிந்தது போல் கலைத்திமிர் பிடித்தவள்தான் ஆனல் சின்னஞ் சிறிய தொரு கேள்விக்குச் சரியான விடையை பகரமுடியவில்லையே !" என்று கூறியவாறே, அங்கு நாவிதன் கையில் கொண்டு வந்திருந்த கத்தியை வாங்கி சாணைக்கல்லிலே நன்றாகத் தீட்டினாள். பிறகு உடனே கத்தியை மடக்கி உறைக்குள்ளே போட்டாள். நாவி

தரை நோக்கி "இப்பொழுதாவது சொல்லமுடியுமா என் கேள்விக்கு விடையை?" என்று கூறினாள். அந்தக் கேள்விக்கு அர்த்தம் அவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்றாக விளங்கி விட்டது

நாவிதன் "நீங்கள் முதலில் கத்தியை எடுத்துச் சாணையில் தீட்டி, மறுபடியும் அந்தக் கத்தியை உறைக்குள் மடக்கி வைத்ததுதான்!" என்று மொழிந்தான்.

"இதன் அர்த்தம் முழுவதும் எனக்கு விளங்கவில்லை. இக் கேள்வி முட்டாள்தனத்திலும் முதல்தரமானது." என்று தன் வெற்றிகரமான தோல்வியை மறைக்க முயன்றான் உக்கிரமன்

"மன்னவரே! ஒரு பெண்ணின் கேள்விக்கு விடைதர முடியாது வீழ்ச்சியடைந்தாலும் முட்டாள்தனமானது என மொழிந்தீர்! அப்பட்டம் யாருக்கு அளிக்கலாம் என்பதை அப்பட்டமாக விளக்குவார் இந்த அம்பட்டர்!" என்று இளவரசி உக்கிரமனிடம் கூறிவிட்டு நாவிதனிடம் "ஐயா! கத்தியை சாணைக் கல்லிலே தீட்டி அப்புறம மடக்கிவைக்கும் காரணம் எதற்கென்பதைக் கூறு? என்றாள் இளவரசி.

நாவிதன் "இளவரசியாரே! தீட்டிய கத்தியை விரித்து அப்படியே வைத்தால், அதன்மீது காற்றோ தூசியோ அன்றி நீர்த்துளிகளோ பட்டு சவரம் செய்து கொள்ளுவோரின் சருமத்தை வலியுண்டாகுமாறு செய்யும். முனையும் மழுங்கிவிடும். நீங்கள் கேட்ட கேள்விப்படி முதலாவதாக நாங்கள் மறவாமல் செய்வது தீட்டிய கத்தியை உடனே மடக்கிவைத்துவிடுவோம" என்று விளக்கினான்.

"இப்பொழுது புரிநததா ஆரியநாட்டு வீரவேந்தரே எல்லாம் அறிநத தாங்கள் அடிககடி நடைபெறும் சாதாரணமான ஒரு சிறிய நிகழ்ச்சியை விளக்கிக்கூற சக்தியில்லாமல் முட்டாள்தனமான கேள்வி என்று முடிவுகட்டிவிட்டீர்களே! இப்பொழுது யார் முட்டாள் என்று விளஙகிவிட்டதா?" என்று இளவரசி வெற்றி முகத்துடன் கூறினாள்.

இளவரசியின் இரண்டு கேள்விகளுக்கும் விடையளிக்க முடியாமல் போய்விட்டோமே என்ற அவமானம் ஆரியவேந்தனை தலைகுனியச செய்தது. எத்தனைதான் அவன் பலசாலியாக இருந்தாலும் ஒரு பெண்ணின் அறிவுக்கு தான் அடிமையாகி விட்டதை நினைத்து முன்னிலும் பன்மடங்கு ஆத்திரத்தையடைந்

தான். கடைசியில் இளவரசி "யார் முட்டாள்?" என்று கேட்டது தன்னைத்தான் என்று உணர்ந்ததும் தன் இடையில் செருகியிருந்த வாளை உருவியவாறே "மல்லிகா! உன் அழகிலே மயங்கினேன்! மணந்துகொள்ள ஆசைப்பட்டேன். இவைகளுக்கு நீ அளித்த வெகுமதி, இந்நாட்டு மக்களின் முன்னிலையில் நீ என்னைத் தலை குனியும்படியாக 'முட்டாள்' என்னும் பட்டம் சூட்டிவிட்டாய்! அதற்குப் பரிசு இதோபார்!" என்று இளவரசியை துணிக்கப் பாய்ந்தான்.

அதுவரையில் தரையில் மௌனமாக இருந்த இளவரசியின் இரண்டாவது கேள்விக்கு விடைதந்த நாவிதன் "ஆரிய மன்னவா! என்ன துணிச்சல் உனக்கு! அறிவோ, ஆற்றலோ இல்லாது போனாலும் ஆத்திரம் மட்டும் அடங்கவில்லையே! யாரிடம் உன் கைவரிசையைக்காட்ட வருகிறாய்?" என்று இளஞ்சிங்கத்தைப் போல ஆரியமன்னன்மீது பாய்ந்து கையிலிருந்த வாளைத் தன் உடைக்குள்ளிருந்து எடுத்த வாளால் ஒரே வீச்சில் கீழே விழும் படிச் செய்தான்.

எதிர்பாராது வந்த அவன் தலையீட்டையும், வார்த்தைகளையும் கேட்ட ஆரிய வேந்தனின் தலை சுழன்றது. "அட பாண்டியா? இந்தக் கர்வக்காரிக்காகவா இந்த நாவிதன் வேடத்தில் வந்தாய்?" என்று திமிறினான்.

ஆம் முட்டாளே! உன்னைப்போல நான் அறிவில்லாதவன் இல்லை. இளவரசி மல்லிகாவின் இந்த இரு கேள்விகளின் விடைகளையும் நான் முன்னமேயே அறிவேன். இளவரசியாரை மணக்க வேண்டுமானால் ஆண்மையால் மட்டுமல்ல அறிவும் வேண்டும் என்பதை நான் நன்கு தெரிந்திருந்தேன். இன்று நீ வந்து இளவரசியின் கேள்விகளுக்கு அர்த்தம் உணர்ந்து விடையளித்தால் சரி; இல்லையேல் நானே அக்கேள்விகட்கு விடையளித்து இளவரசி மல்லிகாவைத் திருமணம் செய்வதென்று என் மாறு வேடத்திறமையும் மல்லிகாவுக்குத் தெரியட்டுமே என்னும் விருப்பத்தால் இப்படி வந்தேன். இவற்றையெல்லாம் ஆச்சரியத்துடன் கவனித்துக் கொண்டிருந்த அரசன், இளவரசி, மற்றுமுள்ள சபையினர் அனைவரையும் நோக்கி உங்கள் இளவரசியார் என்னை மணக்க மனம் ஒப்புவாரா?" என்று கூறினான் பாண்டிய நாட்டு இளவரசன் பராக்கிரமன்.

பாண்டிய நாட்டு இளவரசன் பராக்கிரமனையும், பகல்வேடத் திறனையும் கண்ட இளவரசியாருக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை ஆயினும் "தன் கேள்விகளுக்கு விடை தெரியும்" என்றாரே,

அதன் உண்மையை அறியவேண்டும் என்று எண்ணி "இளவரசே! தங்களை மனப்பூர்வமாக நானும் மணக்க விரும்புகிறேன். ஆனால் நிபந்தனைப்படி என் இரு கேள்விகளுக்குத் தாங்கள் சரியான விடையைத் தெரிந்து கொண்டிருந்தீர்கள் என்பதை நான் எப்படி நம்புவது?" என்றாள் இளவரசி.

"விஜயா! எங்கே அந்த இரு கேள்விகட்கும் உள்ள விடைப் பொக்கிஷம்?" என்று தன் அருகில் மாறுவேடத்தில் நின்று கொண்டிருந்த தன்தோழனைப் பார்த்துக் கேட்டான். அவன் மிகப் பத்திரமாக வைத்திருந்த ஒரு பொன்னிறமான சிறிய பெட்டியைத் திறந்தான். அதனுள் அழகான ஒரு பொன் தகட்டிலே,

இளவரசி மல்லிகாதேவியின் இரு கேள்விகளுக்கு

பாண்டியநாட்டு இளவரசன் பராக்கிரமனின்

— விடைகள் —

O

முதற் கேள்விக்கு விடை — **காற்று**

இரண்டாவது கேள்விக்கு
விடை — **நீட்டி மடக்குதல்**

என்று தீட்டப்பட்டிருந்தன. இதைக்கண்ட இளவரசி அறிவு, ஆண்மை, ஆற்றல், பொறுமை அனைத்திலும் சிறப்புற்று விளங்கிய அந்தப் பாண்டிய இளவரசனிடம் காதல் கொண்டாள். ஆரிய வேந்தன் உக்கிரமன் பகைவனுக்கு அஞ்சாப் பாண்டியனிடம் தன் பராக்கிரமம் பலிக்காதென்று தன் நாட்டை நோக்கி ஓடினான். "எண்ணம்போல் வாழ்வு" என்பதுபோல் "கலையழகி மல்லிகா" என்ற பெயருடன் விளங்கினாள். அன்றே கலையழகி மல்லிகாவுக்கும் பாண்டியநாட்டு இளவரசன் பராக்கிரமனுக்கும் சிறந்த முறையிலே அலங்காரபுரத்து மணப்பந்தலிலே திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

சுபம்.



School Anniversary — Mrs. V. K. Pandian awarding the "Dr. Varaguna Pandian Cup" Presented by Dr. V. K. Pandian to the house that does best in games and sports combined.



(School Anniversary) - Red Cross item - (Palace School)



Capt. T. Murugaiyan, M. A., Principal Raja Serfoji College declaring open the School Exhibition.

School Anniversary — Drama Actor

சிறுவர் செஞ்சிலுவைச் சங்கம்.

நம் பள்ளியில் இச் செஞ்சிலுவைச் சங்கமானது ஒவ்வோராண்டிலும் முன்னேற்றமடைந்துகொண்டே வருகிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன் நம் பள்ளியில் பதிவு செய்யப்பட்ட ஒரு தொகுதியே இருந்தது. சென்ற ஆண்டிலே இரண்டு தொகுதிகளாக இருந்தது. ஆனால் இவ்வாண்டில் மூன்று தொகுதிகளாக முழுதும் வளர்ந்தது. நம் சென்னை ராஜ்யத்திலே மூன்று செஞ்சிலுவைச் சங்கத் தொகுதிகள் உள்ள பள்ளி நம் பள்ளிதான். அதிலும் ஆலோசகர் பயிற்சி பெற்றுள்ள ஆறு ஆசிரியர்கள் இருக்கின்றனர்.

நிற்க, இச் சிறுவர் செஞ்சிலுவைச் சங்கத்தின் முதல் தொகுதி அரண்மனைப் பள்ளியில் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொண்டாற்றி வருகிறது. இவ்வாண்டிலே பத்து அங்கத்தினர் கூட்டங்களும், நான்கு கமிட்டிக் கூட்டங்களும் கூட்டப்பட்டன. இக்கூட்டங்களில் சங்கத்தின் நோக்கங்கள், உறுதிமொழி, முதலுதவி, மாணவர் சுகாதாரம், பள்ளிக்கூட சுகாதாரம், சமூக சேவை, ஒற்றுமை முதலியவைகளைப் பற்றி பேசப்பட்டன.

சுகாதார சம்பந்தமாகச் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தினர் சுற்றுப் புறங்களையும் வகுப்பறைகளையும் சுத்தமாகப் பார்த்துக் கொள்கிறார்கள். கண்ணாடி சீப்பு, தேங்காயெண்ணெய் முதலியவைக் கொடுத்து மாணவர்களைத் தலைவாரிக் கொள்ளும்படிச் செய்கிறார்கள். முதலுதவி மருந்துகள் வைத்து மாணவர்களுக்கு அவசியமானபோது உதவி செய்கிறார்கள். குடிநீர் வசதியும் செய்கிறார்கள்.

புயல் நிவர்ரண வேலையின்போது அங்கத்தினர்களும் பொதுவாக எல்லா மாணவர்களுமே அதிக உற்சாகத்துடன் பழந்துணிகளும் அரிசியும் வசூல் செய்தார்கள். இத் தொகுதியின் ஆலோசகர் புயல் நிவாரணத்தின் பொருட்டு தஞ்சை ஜில்லா செஞ்சிலுவைச் சங்கக் காரியதரிசி, திரு சாமிநாத முதலியார் B. A., B. L., அவர்களுடன் மும்முறை, வேதாரணியம், கோடிக்கரை, முத்துப்பேட்டை, பேராவூரணி முதலிய இடங்களுக்குச் சென்று, சென்னை செஞ்சிலுவைச் சங்கத்திலிருந்து

வந்த துணிகள், பால் பவுடர் முதலியவைகளை விநியோகம் செய்தனர். இச சங்கத்தின் நிதியாளன் ℵ. குபேர் என்ற மாணவனும் ஒரு முறை இந்த நிவாரண வேலையில் கலந்து கொண்டான். புயல் நிவாரணத்திற்காகச் சென்னைக் காரியாலயத்திற்கு இத் தொகுதி ஐந்து ரூபாய் அனுப்பியுள்ளது.

1956 ஜனவரியில் சென்னைக் கிளைச் செஞ்சிலுவைச் சங்கத்தால் நடத்தப்பட்டத் தொகுதிப் போட்டியிலும், ஆலோசகர் போட்டியிலும் இத் தொகுதி பங்கெடுத்துள்ளது. வெற்றிகரமான முடிவை எதிர்ப்பார்க்கிறது.

இத் தொகுதி 56-ம் ஆண்டாகிய இப்புத்தாண்டில் ஒரு தீர்மானம் செய்துள்ளது. அத் தீர்மானமானது, ஒவ்வொரு ஆண்டின் முதல் நாளிலிருந்து ஒரு புது நல்லொழுக்கத்தைக் கடைபிடிப்பது என்றும், அதில் தவறாது நடந்து கொள்வது என்பதாகும் அதன்படி இவவாண்டில் இச சஙகத்தின் நோக்கங்களில் ஒன்றாகிய சுகாதார முன்னேற்றத்தைப் பின்பற்ற, எநத சந்தர்ப்பத்திலும் எசசலையோ அல்லது சளியையோ ரஸ்தாக்களில் துப்புவதில்லை சாக்கடைகளிலோ அல்லது ஒதுக்கமான இடங்களிலோ துப்புவது' என்ற உறுதியைக் கைக்கொண்டது. பிறரைத் திருத்துவதை விட முதலில் நாம் திருந்திக் கொள்வதே இதன் நோக்கம். கூடியவரை அங்கத்தினர் இக் கொளகையைப் பின்பற்றுகின்றனர்.

நம் பள்ளிக்கு அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்திலிருந்து, ஓஹியோ, செயிண்ட் ஆக்னஸ் பள்ளிக் (St. Agnes School, Ohio, U. S. A.) சிறுவர்கள் அனுப்பிய ஆல்பம் (Album) ஒன்று வந்துள்ளது. மிக நேர்த்தியான அந்த ஆல்பம் தஞ்சை ஜில்லாவுக்கு மூன்று வநதுள்ளது. அதில் நமக்கு ஒன்று கிடைத்தது போற்றத்தக்கதே. இதற்கு மாற்றுதலுக்காக மற்றொரு ஆல்பம் தயார செய்து அனுப்பியுள்ளோம்.

ஒற்றுமை மனப்பான்மை ஏற்பட இரண்டு பள்ளிகளுக்கும் கடிதம் எழுதியுள்ளோம் (Inter school Correspondance) நம் தொகுதியில் நடக்கும் வேலைகளை அத் தொகுதியின் சிறுவர்களுக்குத் தெரிவித்து அங்குள்ள வேலைகளைத் தெரிவிக்கச் சொல்லுதலே இதன் நோக்கமாகும். அவற்றில் ஒன்றாகிய ஸ்ரீ சண்முக வித்தியாசாலையிலிருந்து செஞ்சிலுவைச் சங்க அங்கத்தினர் அன்பான கடிதம் ஒன்று அனுப்பியுள்ளனர். மற்றோர் பள்ளியிலிருந்து இன்னும் கடிதம் வரவில்லை.

இன்னும் எதிர்காலத்தில் இச் சங்கம் நிறைய சேவை செய்யும் என நம்புகிறோம்.

இச் சங்க காரியக் குழு உறுப்பினர் :—

1. **T. K. முத்துக்குமரன்** — *தலைவர்*
2. **K. கோபால்** — *உபதலைவர்*
3. **N. ஆராவமுதன்** — *காரியதரிசி*
4. **K. பாபு** — *உபகாரியதரிசி*
5. **S. குபேர்** — *நிதியாளர்.*

ஆலோசகர் :—

1 **திரு T. K. சுந்தரம் அய்யர்**
2. ,, **S. சிதம்பரம்.**

* * * * * *

இச சங்கத்தின் இரண்டாவது தொகுதி கீழவாயிற் கிளைப் பள்ளியில் உள்ளது. இத் தொகுதியும் சீரிய முறையிலேயே நடந்து வருகிறது இவ்வாண்டில் இத் தொகுதியில் எட்டு கூட்டங்கள் கூட்டப்பட்டன, இக்கூட்டங்களில் முதலுதவி ஒழுங்கு முறை, சுகாதாரம், சேவை முதலியவைகளைப்பற்றி சொற்பொழிவாற்றப்பட்டது.

இச சங்கத்தை, சுகாதாரம், தற் சுகாதாரம், தொண்டு, கைத்தொழில், நூல் நிலையம், கடிதப் போக்குவரத்து என்று ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சுத்தத்திற்காக சீப்பு, கண்ணாடி முதலியவை வாங்கி வைக்கப்பட்டுள்ளன. சில சமயங்களில் அழுக்காடை யணிந்த ஏழை மாணவர்களுக்கு சோப்பும் அளிக்கப்பட்டுள்ளது. புயல் நிவாரணத்தின்போது இசசங்க அங்கத்தினர், ஒரு மூட்டை அரிசியும் சுமார் 100 துணிகளும் வசூல் செய்து அனுப்பியுள்ளனர் கண்காட்சிக்காகக் கைத்தொழில் சாமான்கள், ஸ்டாம்ப் ஆல்பம், தீப்பெட்டி. ஆல்பம் முதலியவைகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

இச் சங்கக் காரியக் குழு உறுப்பினர் :—

1. **M. சண்முகம்** — *தலைவர்*
2 **K. திரவியசாமி** — *உபதலைவர்*
3. **S. ஆரோக்கியசாமி** — *காரியதரிசி*
4. **S. ராஜகோபால்** — *உப காரியதரிசி*
5. **T. ராமச்சந்திரன்.** — *நிதியாளர்.*

ஆலோசகர் :—

1. திரு. S. ஜெயராமன்
2. ,, A. டேனியல்.

* * * * * *

இச் சங்கத்தின் மூன்றாவது தொகுதி நம் தாய்ப் பள்ளியில் உள்ளது. அத் தொகுதியைக் கலியாண சுந்தரம் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரும், ஜில்லா சிறுவர் செஞ்சிலுவைச் சங்கக் காரியதரிசியுமான திரு K. பாலகிருஷ்ண நாயுடு அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். இத் தொகுதி சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டதனால் குறிப்பிடத்தக்க ஆக்க வேலைகள் யாதும் செய்யப்படவில்லை. கூட்டங்கள் கூட்டப்பட்டன. வரும் வருடத்தில் சிறந்த தொண்டாற்றும் என்பது திண்ணம்.

இச் சங்கத்தின் காரியக குழு அங்கத்தினர் :—

1. R. சௌந்தரராஜன் — தலைவர்
2. R. வில்வசேகரன் — உபதலைவர்
3. S. கிருஷ்ணமூர்த்தி — காரியதரிசி
4. S. சீனிவாசன் — நிதியாளர்.

ஆலோசகர் :—

1. திரு. G. சங்கரன் B. A., L. T.,
2. ,, P. R. சுப்ரமணியம் B. A., L. T.,

S. சிதம்பரம், ஆலோசகர்.



Science Club.



N. C. C. Group.



Sri S. Bethanna Nadar (Donor)



Sri K. S. Raju (Donor)

தூய பேதுரு உயர்நிலைப்பள்ளி, தஞ்சாவூர்.

172-வது ஆண்டு விழா அறிக்கை.

அவைத தலைவரவாகளே !
பாணடியன அமமையாா அவாகளே !
அன்பிறகுரிய பெறறோாகளே !
கலையுணாவுமிகக பழைய மாணவாகளே !
அறிவு சானற சகோதர சகோதரிகளே !

எமது பளளியில் இநத 172-ஆம ஆண்டு விழாவின் சாாபில் குழுமியுள்ள உங்கள யாவருககும எமது மனமாரநத வரவேறபைக கூறுகிறோம.

சென்ற ஆண்டின் அறிக்கைக்குப் பிறகு எம் பள்ளியில் நிகழ்நதுளள நிகழ்சசிகளைபபறறியும, பளளி அடைநதுளள முனனேறறதைதபபறறியும நீங்கள அறிய விருமபுவீாகள. ஆகையால அவறறை இங்கு எடுத்துக கூற விருமபுகிறேன்.

ஆசிரியர் குழுவில் மாறுதல்

ஏறக்குறைய நாறபது ஆண்டுகள ஆசிரியாாயும,கிளைபபளளித தலைமை ஆசிரியராயும, தாளாளராயும, தூய பணியாறறியுளள திரு. S. கிருஷ்ண ஐயா தம 60-ஆம வயதில ஓய்வு பெறறாா. அவா உணமையோடும, பகதியோடும, ஆாவததோடும தனனலம பாராமல செய்துளள சேவையை எம பளளி மறகக முடியாது. பளளி வாழககையும, அவா வாழ்ககையும சிறபபுறற முறையில எககாலததிலும இணைநதிருநதது. எதிா காலத்திலும இணைநதிருககும எனறு சொல்லுவோமானால் அது மிகையாகாது கடவுள அவருக்கும, அவரது மனைவி மககளுககும நீணட ஆயுளையும, நல்ல அமைதியான வாழககையும, உடலுறுதியையும, மன நிமமதியையும அருளவாராக.

கட்டிட வசதிகளும், பிற நலன்களும்,

மாணவாகள நலனகருதி ரூபாய் 6000 மதிபபுள்ள 84 பெஞசு மேஜைகள செய்யபபடடுளளன. அத்துடன் மாணவா அறிவைப பெருககும வழியில் ரூபாய் 1500 பொறுமானமுளள Tape Recorder ஒனறு வாங்கபபடடிருக்கிறது. நீஙகள அற றும சொறபொழிவுகளையும், மறறும சாதாரணப பேசசு, உரை

யாடல் இவைகளையும், பாடும் பாட்டுக்களையும் அது பதிவு செய்து விடும். பேசுவோர் அது பக்கத்திலிருக்கும்போது கவனமாய்ப் பேசவேண்டும். மேலும் நிழற்படக் குழு திறம்பட வேலை செய்யும் பொருட்டு ரூ 400 விலையுள்ள Eularger வாங்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாகக் கட்டிடத்தொடர்பாக, உங்களில் அனேகர் அறிந்தபடி பள்ளித் தலைவர் அலுவலகத்தையும், தாளாளர் (Clerks) அலுவலகத்தையும் மிக அழகிய முறையில் திருத்தி அமைத்துள்ளோம். மேலும் ரூ. 6000 செலவில் மாணவர்களுக்கென்று இரண்டு புதிய வகுப்பறைகளும் கட்டியுள்ளோம். அதோடு கடந்த மூன்று ஆண்டுகளாக நம் அரண்மனைப் பள்ளி நிறுவப்பட்டுள்ள நிலையத்தில் உள்ள பழைய கட்டிடங்கள் புதுப்பிக்கப்பட்டுவரும் வேலையானது, இப்பள்ளியாண்டோடு முடிவு பெறும். அப்போது அங்கே இரண்டு வகுப்பறைகளும், அலுவலகமும் ஆசிரியர் அறையும், பொருட் காட்சிசாலையும், ஒரு கைத்தறி நெசவு நிலையமும் ஏற்படுவதற்குரிய வசதி கிடைக்கும். இங்குள்ள மேல் மாடியானது பழுது பார்க்கப்பட்டால், அது மாணவர் விடுதியாக (Students Hostal) பயன்படுத்தத்தகுந்தது 100 பேர் வசிக்க இடமுண்டு அதற்கு நல்ல பொருளாதார நிலையிலுள்ள நண்பர்களும், பெற்றோர்களும் பொருள் கொடுத்து உதவ வேண்டுகின்றோம்.

மாணவர் தேர்வும், அறிவுத்துறையில் பெற்ற வெற்றியும்.

பள்ளியில் இப்போது 1300 மாணவர் படிக்கின்றனர் கடந்த பள்ளி இறுதித் தேர்விற்கு (S. S. L. C.) 161 மாணவர்கள் அனுப்பப்பட்டனர். அவர்களில் தேறியவர்கள் 80. அதாவது 50 சத விகிதம். இது மகிழ்ச்சி தரக்கூடியது என்று நாங்கள் சொல்லவே மாட்டோம். ஆனால் தற்போது நாட்டின் கல்வித் தரம் குறைவாயிருக்கும்போது கிளிப் பிள்ளையைப் பேச வைப்பதுபோலவும், அன்று பழுக்கக்கூடாத காய்களைச் செயற்கைமுறையில் பழுக்க வைப்பது போலவும், எங்கள் பிள்ளைகளைப் படிக்க வைத்துத் தேர்வில் சத விகிதத்தைப் பெருக்குவது எம் குறிக்கோளல்ல. ஏனென்றால் அது சரியான பயிற்சியாகாது. ஆண்டு தோறும் படிக்கும் பிள்ளைகள் அறிவில் வல்லவராகவும், பிற்கால வாழ்க்கையில் தாங்கள் ஆற்ற வேண்டிய பணி, தொண்டு இவற்றிற்கு நல்ல பயிற்சி பெறவும், நல்ல முறையிலே ஐம்புலன்களையும் பயன்படுத்திக் கல்வி பயில வேண்டுமென்பதே எம் விருப்பம். அத்தகைய கல்விதான் கற்கும் ஒருவனுக்கும் அவன் நாட்டிற்கும் பயன்தரும். 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது'.

பள்ளி இறுதித் தேர்விற்கு முகப்பாக ஒவ்வொரு ஆண்டி லும் நடந்து வரும் மாணவர் மன்றத் தமிழ்த் தேர்விற்குச் சென்ற 75 மாணவர்களில் 37 பேர் முதல் வகுப்பிலும், 22 பேர் இரண்டாம் வகுப்பிலும், 5 பேர் மூன்றும் வகுப்பிலும் தேறி யுள்ளனர். நகர உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் கழகத்தார் இவ் வாண்டு (55-56)-ல் நடத்திய பேச்சுப் போட்டியில் ஆறும் படி வம் 'அ' பிரிவில் (VI-A) படிக்கும் மாணவன் V. பஞ்சநதம் முதல்வனாக நின்று ஒரு தங்கப் பதக்கத்தைப் பெற்றான்.

உடற் பயிற்சி.

உடற் பயிற்சித்துறையில் வழக்கம்போல் எங்கள் விளையாட் டுக்களையும், பந்தயங்களையும் நடத்தினோம். பள்ளி ஆண்டு விளை யாட்டுப் போட்டிக்கு Dr. V. K. பாண்டியன் அவர்களைத் தலைமை தாங்க அழைத்திருந்தோம். ஆனால் எதிர் பாராத விதமாய்ப் பெரும் மழை பெய்ததால் 'பரிசு வழங்கல்' நிகழ்ச்சி நடைபெற வில்லை. அந்நிகழ்ச்சியையும் இவ்வாண்டு விழாவோடு சேர்த்தே கொண்டாடுகின்றோம்.

தஞ்சை மாவட்டக் கழகப் பந்தயப் போட்டியில் எங்கள் பள்ளி நல்ல வெற்றி பெற்றுள்ளது.

மேற்குத் தஞ்சை மாவட்ட ஓட்டப் போட்டியில் பெரியோர (Senior) பிரிவில் முதன்மையாக நிற்கும் பள்ளிக்கென வழங்கப் படும் நற்சான்றிதழ் (Certificate), பெரியோர்க்குரிய அஞ்சல் ஓட்டக் கேடயம் (Senior Relay Shield), ஓட்டப் பந்தயத்தில் முதன்மையாக நிற்கும் பள்ளிக்கென்று கொடுக்கப்படும் அருளா னந்தசாமி நாடார் கோப்பை, விளையாட்டுக்களிலும், ஓட்டப் பந்த யங்களிலும் முதன்மையாக நிற்கும் பள்ளிக்கு அளிக்கப்படும் ஜோதிபாண்டியன் கோப்பை முதலியவைகளைப் பெற்று நம் மாணவர் வாகை சூடினர்.

மேலும் பெரியோர்க்குரிய கூடைப் பந்து போட்டியிலும் நடுவர்க்குரிய (Intermediate) கூடைப் பந்து, Soft Ball இவை களிலும் நற்சான்றிதழ்கள் பெற்றதோடு விளையாட்டுக்களில் முதன்மையாக நிற்கும் பள்ளிக்குத் தரும் பரிசுத்தம் கோப்பை யையும் அடைந்தனர். நம் பள்ளி மாணவர்கள் கீழ மேலத்தஞ்சை மாவட்டங்கள் இரண்டிற்கும் சேர்ந்து நடந்த போட்டியில் பல பரிசுகளைப் பெற்றனர்.

விளையாட்டுக்களில் நம் மாணவர்கள் நடுவர்க்குரிய கூடைப் பந்து போட்டியில் வென்று பரிசுத்தம் கேடயத்தையும், அன்னார் குரிய Soft Ball-ல் வென்று இஸ்ரேல் கேடயத்தையும் பெற்றனர்.

ஓட்டப் பந்தயத்தில் பெரியோர்க்குரிய அஞ்சல் ஓட்டக் கேடயம், பெரியோரில் (Seniors) தகுதிபெற்ற முதன்மையான பள்ளிக்கு வழங்கும் Hilton Brown கோப்பை, பெரியோர், நடுவர் என்ற இரு நிலையினரையும் ஒன்று சேர்த்து பார்க்குங்கால் முதன்மையாக நிற்கும் பள்ளிக்கு வழங்கும் மாரின் கேடயம், முதலியவைகளைப் பெற்றனர். பெரியோர்களில் A. R. செயசேகரன் முதன்மையான மதிப்பெண் பெறுபவர்க்குரிய கிரிக்மெடலை போன ஆண்டிலேயே அடைந்ததால், தனிப் பதக்கம் (Special Medal) ஒன்றைப் பெற்றான்.

விளையாட்டுக்களிலும், ஓட்டப் பந்தயங்களிலும் ஒரு சேர முதன்மையாக நிற்கும் பள்ளிக்கு வழங்கும் கோபாலசாமி பெருங் கோப்பையை (Trophy) நம் பள்ளி பெற்றிருக்கிறது.

பெரியோர்க்குரிய அஞ்சல் ஓட்டத்தில் நம் பள்ளி மாணவர்கள் புதிய கால நிலையை நிலை நாட்டினர். (New Time Record has been Set up) மாரின் கேடயம், அஞ்சல் ஓட்டக் கேடயம், Hilton Brown கோப்பை ஆகிய மூன்றையும் மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பெற்றதால் அவ்வவற்றிற்கென்று வழங்கப்படும் திறமைக் கேடயங்கள் நம் பள்ளிக்குக் கிடைத்தன.

இந்த ஆண்டில் எங்கள் பள்ளிக்குள்ளேயே நடக்கின்ற மனை விளையாட்டுப் போட்டிகளுக்கென்றும், ஆண்டு விளையாட்டுப் பந்தயப் போட்டிகளுக்கென்றும் பரிசு அளிப்பதற்காக வெள்ளிக் கோப்பைகள் அளிக்கப் பெரியார்கள் சிலர் முன் வந்துள்ளனர். அவர்கள் யாவரென்றால் :—

திருவாளர்கள் D. கணபதியா பிள்ளை—Railway Broker.
P. K. V. நடேச செட்டியார்—Pro. காமாட்சி ரைஸ்மில்
S. பெத்தண்ண நாடார்— Pr. வெண்சங்கு சீயக்காய் தூள் தொழிற்சாலை.
M. குப்புசாமி செட்டியார்
S. கோவிந்தராஜன் செட்டியார் } Commission Agents.
நடராசமாணிக்கம் — Contractor.

S. வேங்கடாசலம் பிள்ளை — **Pro. Lakshmi Furniture Mart.**

K. S. ராஜு — General Merchant.

ஆவார்கள்.

அவர்கள் யாவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி. அவர்களை எம் பள்ளி ஒருக்காலும் மறக்காது. மறக்க முடியாது.

குடிமைப் பயிற்சி.

குடிமைப் பயிற்சியானது கல்வித் துறையில் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டபோதிலும் எங்கள் பள்ளிக்கல்வி முழுவதும் குடிமைப் பயிற்சி மயமாகவே விளங்கவேண்டுமென்று எங்கள் விருப்பம். ஆகையால் முப்பதிற்கு மேலான இன்றியமையாத செய்கிற ஈடுபாடுகளை (Activities) அமைத்து நடை முறையில் இருக்கின்ற மாணவர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளோம்

மாணவர்களிடையே உடல்நல உணர்ச்சியும் நல்ல ஆரோக்கிய வழக்கங்களும் அமைந்து, அவர்கள் சட்ட திட்டங்களுக்கு மதிப்புக் கொடுத்துத் தலைமையாளர்களாய்ப் பணியாற்றும் ஆற்றலும், பொறுப்புணர்ச்சியும் உடையவர்களாயும், கலையுணர்வுள்ளவர்களாகவும் உழைப்பின் உயர்வை உணர்ந்தவர்களாகவும், எழுதுவதிலும், பேசுவதிலும் திறமையுள்ளவர்களாகவும், ஆராய்ச்சித் திறன் பெற்றவர்களாகவும் சமூக நலத் தொண்டில் ஆர்வமுள்ளவர்களாகவும் பிற்கால வாழ்க்கையில் திகழ வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இப்பயிற்சிகளை அளிக்கின்றோம்.

இந்த ஆண்டில் பள்ளி அமைச்சர் அவை, வகுப்பு நீதி மன்றம், பள்ளிக்கடை, சிறு சேமிப்பு நிலையம், பள்ளி அஞ்சல் நிலையம், (Post Office), நிழற்படக் குழு, சாரணர் குழு செஞ்சிலுவைச் சங்கம், நாட்டு இளைஞர் படை, பள்ளி நிழற்படக் காட்சி, வனபோஜனம் (Picnic) ஆகிய இவை தொடர்பான வேலைகள் சிறப்பு வாய்ந்தன எனக் குறிப்பிடக் கூடும்.

இன்பப் பயணக்குழு ஆதரவின் கீழ் மாணவர்களும் ஆசிரியர்களும் நாகை. திருச்சி டால்மியாபுரம், மதுரை, ராமேஸ்வரம், தனுஷ்கோடி முதலிய இடங்களுக்குச் சென்று இன்பத்தை மாத்திரமல்ல பேரளவில் அறிவையும் பெற்று வந்தனர்.

1—3—1956-ல் பள்ளியின் இரண்டாம் ஆண்டு கண்காட்சி விழா நடந்தது. அவ்வமயம் சரபோஜி கல்லூரித் தலைவரான Captain முருகையன் அவர்கள் அதைத் திறந்து வைத்து இனிய

சொற்பொழிவாற்றினர். அவருக்கு எங்கள் நன்றி. கண்காட்சியும் அழகிய முறையில் நடைபெற்றது. அதை நல்ல முறையில் நடத்தியுள்ள குழுவினரை நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

சமூகத் தொண்டு

புயல் நிவாரணத்திற்காக எங்கள் பள்ளி 2250 துணிகளோடு பதின்மூன்று மூட்டை ஆறரைப்படி அரிசியும் தஞ்சைப் பொது மக்களிடமிருந்து வசூல் செய்து புயலில் அடிபட்டுத் தவித்த ஏழைகள் இருக்குமிடத்திற்கு அனுப்பியது. காச நோய் நிவாரண நிதிக்காக (T. B. Seals) ரூபாய் ஐம்பது வசூல் செய்து அப்பொருளை அரசியல் அலுவலாளருக்கு அனுப்பியது. Hi-y குழுவின் உறுப்பினரான முப்பது மாணவர்கள் தங்களது சுய முயற்சியால் கைப்பணத்தைச் செலவழித்துக் கீழ வாயில் பகுதியில் வீடின்றித் தவித்த ஒரு ஏழைக்கு வீடு கட்டித் தந்தனர்.

பொதுக் குறிப்புக்கள்

இதுவரை பள்ளியைப் பற்றிச் சில குறிப்புக்களை எடுத்துரைத்தேன். அடுத்தாற் போல், கல்வியைப் பற்றிப் பொது மக்கள் கொண்டுள்ள ஐயப்பாடுகளைப் பற்றியும், அதன் தரத்தைப் பற்றியும் சுருக்கமாகச் சில செய்திகளை எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

தற்காலப் படிப்பைப்பற்றி அநேகர் அது உபயோகமற்றது, அதை எடுத்து வேறு வகைபாக மாற்றி அமைக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்பொழுதிருக்கும் புதிய திட்டம் அமுலுக்கு வருமுன் அவ்வாறு கூறினால் அது மிகையாகாது. ஆனால் இப்போதுள்ள புதிய திட்டம் ஏறக்குறைய நல்ல திட்டம் என்று நான் சொல்லுகிறேன். எவ்வாறெனில், கல்வி ஒருவனுடைய பிற்கால சமுதாய வாழ்க்கையில் அவனது வயிற்றுப் பிழைப்பிற்கும், சமுதாய நலத்திற்கும் பணியாற்றக் கூடிய ஆற்றலை அளிக்க வேண்டும். அதோடு நல்ல குடிமகனாக வாழ்க்கை நடத்த அவனை ஊக்குவிக்க வேண்டும். மேலும் அவனுடைய வாழ்க்கையை இன்புற்ற வாழ்க்கை யாக்க வேண்டும். இவ்வளவு நோக்கங்களையும் இப்போது கொடுக்கப்படும் கல்வி நிறைவேற்றுகிறது.

டாக்டர் இலக்குமணசாமி முதலியார் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்ட (Secondary Education Commission Report) இன் அடிப்படைக் கருத்தை ஒட்டி அமுலுக்கு வந்து கொண்டிருக்கும் திட்டமானது, இப்போது மாணவர்களுக்கு பிற்கால வாழ்க்கையின் சிறந்த நோக்கங்களை நிறைவேற்ற உதவி செய்கிறது. ஏனென்றால், இந்தத் திட்டத்தில் தொழிற் கல்வி கூடிய மட்டும் போற்றக்கூடிய அளவிற்கு அமைந்துள்ளது.

ஆகையால் பொது மக்களும், பெற்றோர்களும். இப்போதுள்ள உயர்நிலைப்பள்ளியில் பயிலும் கல்வியின் பயனைப்பற்றி ஐயப்படச் சிறிதும் இடமில்லை,

